# இன்றும், நாளையும் மெட்ரோவே சிறந்தது

சென்னை, அக். 11–

பிரதமர் – சீன அதிபர் சென்னை வருகையால், போக்குவரத்து நெரிசலில் சிக்காமல் செல்ல, இன்றும், நாளையும் மெட்ரோ ரயில் பயணம் உதவியாக இருக்கும்.

பிரதமர் – சீன அதிபர், மாமல்லபுரம் வருகையையொட்டி, சென்னையில், இன்றும், நாளையும், வாகன போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



சென்னை விமான நிலையத்தில் இருந்து சின்னமலை வரை, இன்றும், நாளையும், காலை, 6:00 மணியில் இருந்து, 11:00 மணி வரை, கனரக, சரக்கு மற்றும் இலகுரக வாகனங்கள், டேங்கர் லாரி போன்ற வாகனங்கள் செல்ல அனுமதி இல்லை.

இதனால், இவ்வழியாக சென்னையில் உள்ள இடங்களுக்கு செல்ல வேண்டியவர்கள், வேறு பாதைகளில், வாகனங்களில் சுற்றிச்செல்லும் நிலையும், நெரிசலில் சிக்கும் நிலையும் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனால், தாம்பரம், குரோம்பேட்டை, பல்லாவரம் ஆகிய பகுதிகளில் இருந்து, பழவந்தாங்கல், பரங்கிமலை, நங்கநல்லூர் சாலை, கிண்டி, சின்னமலை, சைதாப்பேட்டை, ஆயிரம் விளக்கு, அரசினர் தோட்டம், சென்ட்ரல், வண்ணாரப்பேட்டை செல்ல வேண்டியவர்கள், விமான நிலையத்தில் இருந்து, மெட்ரோ ரயிலில் பயணம் செய்வது, ஏதுவாக இருக்கும்.